1984 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவக் கல்லூரியினுடைய தலைவர் கல்லூரி துறையினுடைய இயக்குநர் ஆகியவர்களுடைய கருத்துரைகளின் அடிப்படையில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பதிவாளருடைய கருத்துரை அடிப்படையில் அரசு விரைவில் முடிவு செய்யும்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே குமரி மாவட்டத்திற்கு விவசாயக் கல்லூரி கேட்கப்பட்டது, கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்கள் இல்லை என்று நேற்றே அறிவித்தார்கள் ஆகவே கால்நடைக் கல்லூரி அங்கே ஆரம்பிப்பதற்கு முன்வருமா? அங்கே அரசு சார்பிலே ஒரு கல்லூரி கூட இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அதை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்தக் குழுவின் பரிந்துரை வந்ததற்குப் பிறகு அதைப்பற்றி முடிவு செய்யவேண்டும்.

[முற்பகல் 9-20]

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, பிரிட்டிஷ ஆட்சிக் காலத்திலே கால்நடைப் பண்ணை தர்மபுரி, ஓசூரிலே நிறுவப்பட்டது. கால்நடை வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் வேண்டிய இயற்கை அமைப்பும் நல்ல சீதோஷண நிலையும் இருக்கிற காரணத்தினாலும் ஏற்கனவே அரசு ஆர்ஜிதம் செய்த நிலங்கள் இருப்பதாலும் அங்கே கால்நடை மருத்துவக் கல்லூரியைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அதையும் சேர்த்துப் பரிசீலிப்போம்.

சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க கோடை நீர்த் தேக்கம் கட்டும் திட்டம்.

397. (*வினா 16546) திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிப் பகுதிகளுக்குக் கோடையில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாமலிருக்கக் கோடை நீர்த் தேக்கம் கட்ட அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புளியங்குடி பகுதியிலும் சங்கரன்கோயில் பகுதியிலும் ஒவ்வொரு ஆண்டும் கோடைக் காலத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஏற்கனவே ஒரு குடிநீர் தேக்கம் உருவாக்குவதற்காக அங்கு இருக்கக்கூடிய பொறியாளர்கள் ஆய்வு செய்து இங்கே பரிந்துரை செய்து இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அப்படி இங்கே அரசுக்கு அனுப்பவில்லை என்றாலும் அரசு அதில் உடனடியாகத் தலையிட்டு அந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஆய்வு செய்து புதிய குடிநீர்திட்டம் கொண்டு வரவேண்டியது மிக முக்கியமானது. ஆனால் நகராட்சிகள் பொறுத்தவரையில் ஆய்வுப் பணிக்கான தொகையை செலுத்திய பின் தான் இந்த வேலைகள் மேற்கொள்ளப்படும். எனவே, குடிநீர் வடிகால் வாரிய இயக்குநர் அவர்கள் இதற்கான ஆய்வுத் தொகை செலுத்தவில்லை என்று தெரிவித்துள்ளார். எனவே, ஆய்வுத் தொகை செலுத்துவதற்கு வேண்டிய முயற்சி அனைவரும் எடுத்துக்கொள்வது நல்லது.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புளியங்குடிக்கு மேற்கே உள்ள வனப் பகுதியில் நீர் வளம் போதுமானதாக இல்லை என்று தாமிரபரணி ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தை உருவாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இதை அரசு அறியுமா? அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதை ஆராய்வதாக இருந்தாலும் எங்கே தண்ணீர் இருக்கிறது? எவ்வளவு ரூபாய் இந்த திட்டத்திற்கு செலவு ஆகும்? மெயின்டெனன்ஸ் சார்ஜ் எவ்வளவு? இதை ஆய்வதற்கு அவர்கள் இன்வெஸ்டிகேஷன் தொகையை கொடுக்க வேண்டும். அந்தத் தொகையை கொடுப்பதற்கு அவர்களால் இயலாத நிலையில் இருக்கிறார்கள். எனவே, இன்வெஸ்டிகேஷன் தொகையை கொடுப்பார்களானால் ஆதாரம் எங்கே இருக்கிறது? எவ்வளவு செலவு ஆகும் என்ற பர்டிகுலர்ஸ் தயார் செய்து அதற்கு மேல் நடவடிக்கை எடுக்க அரசு எற்பாடு செய்யும்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறபோது இன்வெஸ்டிகேஷன் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அந்த இரண்டு நகராட்சிகளும் மிகவும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நகராட்சிகள் ஆகும். அரசு அதற்கு கடன் கொடுத்து அப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1984 மாச்ச் 22]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் இப்போதைக்கு இல்லை.

திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோயில் நகர மன்றத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறை பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு வருடத்தில் 6 மாதத்திற்கு மேலாக குடிநீர் தட்டுப்பாடு இருக்கிறது என்பதைக் கடந்த காலத்தில் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் குடிநீர் வடிகால் வாரியத் தலைவராக இருந்த மதிப்பிற்குரிய திரு. இ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு ஒரு கருத்தரங்கத்திற்கு வந்தபோது இந்தப் பிரச்சினையை அங்கே அவர்களிடம் வைத்தபோது அவர்கள் சங்கரன்கோயில் முக்கியத்துவத்தை உணர்ந்து தாமிரபரணி ஆற்று குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பரிசீலனை செய்வதாக அந்த இடத்திலேயே வாக்குறுதி கொடுத்தார்கள். இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் அந்த நகர மன்றம் கொடுக்க முன்வந்தால் அந்தத் திட்டத்தைப் பற்றி பரிசீலனை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோயில், புளியங்குடி ஆகிய 2 நகராட்சிகளும் இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் ஆய்வுத் தொகையை கொடுக்க முன்வந்தால் நிச்சயமாக ஆய்வு செய்யப்படும்.

வணிக நிறுவனங்கள் கட்டாயம் தமிழில் பெயர்ப்பலகை வைக்க வேண்டும் என்பது குறித்து பிறப்பிக்கப்பட்ட ஆணை.

398 *(வினா எண். 19496) திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள வணிக நிறுவனங்கள் கட்டாயம் தமிழில் பெயர்ப்பலகை வைக்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் தமிழ்ப் பெயர்ப்பலகை வைக்காத நிறுவனங்கள் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 1948ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளின் 15-வது விதியில் அனைத்து நிறுவனங்களின் பெயர் பலகைகளில் தமிழ் பெயர் முதலாவதாக எழுதப்படவேண்டும் என்றும் பிறமொழிகள் உபயோகிக்கப்படுமிடத்து ஆங்கிலப் பெயர் இரண்டாவதாகவும் மற்ற மொழி ஏதாவது இருக்குமேயானால் அது ஆங்கிலப் பெயருக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS